**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

நாள்: 29.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான பயணம் தொடர்பான, பட்ஜெட்டுக்கு பிந்தைய மாநாட்டில் நாளை புதுடெல்லியில் உரையாற்றுகிறார்.

2024-25ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது.

நாட்டிலேயே அதிக புலிகளை கொண்ட மாநிலம் என்ற பெருமையை மத்திய பிரதேசம் பெற்றுள்ளதாக அம்மாநில முதலமைசசர் திரு. மோகன் யாதவ் தெரிவித்தார்.

புதுச்சேரியில், நகரத் தந்தை ஏதுவார் குபேர் பிறந்த நாள் விழா இன்று அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.

-----------------------------------

*பிரதமர்* (9)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான பயணம் தொடர்பான, பட்ஜெட்டுக்கு பிந்தைய மாநாட்டில் நாளை புதுடெல்லியில் உரையாற்றுகிறார். இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் நடத்தப்படும் இந்த மாநாட்டில், தொழில் துறையினர், படைப்பாற்றல் திறனாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுனர்கள் பங்கேற்க உள்ளனர். மத்திய அரசின் தொலை நோக்குத் திட்டங்கள் மற்றும் தொழில் துறையின் பங்கு குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளைச் சேர்ந்த தொழில் கூட்டமைப்பு பிரதிநிதிகளும், காணொலி மூலம் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

-----------------------------------

*பட்ஜெட்* 1 (15)

2024-25ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது. சாதிவாரி கணக்கெடுப்பு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்க, சட்டப்பூர்வ உத்தரவாதம் உள்ளிட்டவை குறித்து, மக்களவை எதிர்கட்சித்

தலைவர் திரு. ராகுல்காந்தி வலியுறுத்தினார். நாட்டின் மக்கள் தொகையில் 73 சதவிகிதமாக இருக்கும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த பட்ஜெட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

சமாஜ்வாதி கட்சியின் மக்களவை உறுப்பினர் திருமதி டிம்பிள் யாதவ், கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து குறைந்து வருவதாகவும், நாட்டில் வேலையின்மை விகிதம் அதிகரித்து வருவதாகவும், கூறினார். மேலும், அக்னி வீர் திட்டம், சாதிவாரி கணக்கெடுப்பு குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். சுகாதாரத் துறைக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்றும், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பெரும் பற்றாக்குறை உள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

பட்ஜெட் 2 (5)

அக்னி வீர் திட்டம் குறித்த எதிர்கட்சி உறுப்பினர்களின் குற்றச் சாட்டுக்கு பதில் அளித்த பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இந்த திட்டம் குறித்து தவறான கருத்துக்களை

எதிர்கட்சிகள் உருவாக்குகின்றன என்றும், அக்னி வீர் குறித்து விவாதிக்க தாம் தயாராக இருப்பதாகவும், கூறினார்.

---

ஜெக்தீப் தன்கர் (15)

டெல்லி பயிற்சி நிறுவனத்தில், தேர்விற்கு பயிற்சி பெற்று வந்த 3 மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் குறித்து மாநிலங்களவையில் விவாதம் நடைபெற்றது. அரசியல் சாசனப் பிரிவின் விதி, 176ன் கீழ், இது குறித்து விவாதிப்பதற்கான அனுமதியை, மாநிலங்களவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், வழங்கினார். கல்விக்கான சிறப்பு பயிற்சிகள் தற்போது வணிகமயமாகி உள்ளது, கவலை அளிப்பதாக அவர் கூறினார். இளைஞர் நலன், நகர்ப்புற கட்டமைப்பு மற்றும் ஆளுமையின் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும், இன்று விவாதம் நடைபெற்றது.

இதனிடையே காங்கிரஸ் மற்றும் பிஜேபி உறுப்பினர்கள், டெல்லி பயிற்சி நிறுவனத்தில் மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் குறித்து மக்களவையிலும் விரிவான விசாரணை வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மேலும், காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசி

தரூர் பேசுகையில், எந்தவொரு இழப்பீடும் இச்சம்பவத்தை ஈடு செய்ய முடியாது என்று கூறினார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் பேசுகையில், இந்த பயிற்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்த அலுவலருக்கு எதிராக, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

-----------------------------------

ஜெய்சங்கர் 1 (17)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இன்று தொடங்கிய குவாட் நாடுகளுக்கு இடையிலான வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில், ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொண்டு, பாதுகாப்பு, முன்னேற்றம், வளம், நிலைத் தன்மை போன்றவை குறித்தும், ஒத்துழைப்பு மற்றும் நம்பகத் தன்மை குறித்தும் விவாதித்தனர். குவாட் கூட்டமைப்பின் மாநாட்டிற்கு பின்னர், இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், வரும் ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட

நடவடிக்கைகள் குறித்து விரிவான அட்டவணை தயாரிக்கப்பட்டு இருப்பதாகவும், தொலை தொடர்பு தொடங்கி, கடல் வழித்தட இணைப்பு, பேரிடர் மீட்பு, சுகாதார பாதுகாப்பு, காலநிலை மாற்றம், திறன் மேம்பாடு, தீவிரவாதத்தை எதிர்கொள்வது உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் செயலாற்றுவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவித்தார். குவாட் அமைப்பின் வளர்ச்சிக்கு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் முக்கிய பங்களித்து உள்ளதாகவும், கடந்த சில ஆண்டுகளில் விரிவான நிகழ்ச்சி நிரல் கட்டமைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

*ஜெய்சங்கர் 2* (4)

புதிய தொழில்நுட்பங்களை அதிக அளவில் கொண்டு வந்து, புதிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும், இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்க பாதுகாப்பான, சர்வதேச கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

-----------------------------------

*புலிகள் தினம் 1 (15)*

இன்று, சர்வதேச புலிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதனையொட்டி, மத்திய பிரதேசத்தில், குஷாபாவ் தாக்கரே கலையரங்கில், சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வனம் மற்றும் வனவிலங்குகளை பாதுகாப்பதில் சிறப்பாக செயல்பட்ட வனப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கவுரவிக்கப் பட்டனர். இந்நிகழ்ச்சியில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், நாட்டிலேயே அதிக புலிகளை கொண்ட மாநிலம் என்ற பெருமையை மத்திய பிரதேசம் பெற்றுள்ளதாக கூறினார். தொடர்ந்து, 785 புலிகள், மாநிலத்தில் உள்ளதாகவும், அதிக எண்ணிக்கையில் புலிகள் உள்ள மாநிலமாக திகழ்வது குறித்து பெருமை கொள்வதாகவும், டாக்டர் மோகன் யாதவ் பெருமிதம் தெரிவித்துள்ளார். மாநிலத்தில் மொத்தம் 7 புலிகள் காப்பகம் இருப்பதாகவும், சுமார் 25 லட்சம் சுற்றுலா பயணிகள் புலிகள் காப்பகங்களுக்கு வருகை புரிந்து, 55 முதல் 60 கோடி ரூபாய் வரை, மாநிலத்திற்கு வருவாய் கிடைப்பதாகவும், அவர் தெரிவித்தார். மேலும், புகைப்பட கண்காட்சி ஒன்றையும் அவர் தொடக்கி வைத்தார்.

*புலிகள் தினம்* 2 (5)

புலிகள் பாதுகாப்பு மற்றும் அவை வாழ்வதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவது போன்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 29ஆம் தேதி சர்வதேச புலிகள் தினமாக கொண்டாடப்படுகிறது. உலகில் 80 சதவிகித புலிகள் இந்தியாவில் உள்ளதாக, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

----------------------------------

*மன்சுக் மாண்டவியா* (12)

தற்போதைய அரசின் கொள்கைத் திட்டங்களால், நாட்டில் வேலையின்மை விகிதம் 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பதில் அளித்து பேசினார். இந்த ஆண்டுக்கான பட்ஜெட் குறித்து பாராட்டு தெரிவித்த அவர், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக 2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாகவும், கடந்த 2 ஆண்டுகளில், தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் தொழிலாளர் மக்கள்

தொகை விகிதம் உயர்ந்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 44 சதவிகிதத்தையும், தொழிலாளர் மக்கள் தொகை விகிதம் 40 சதவிகிதத்தையும் எட்டி உள்ளதாக, அவர் சுட்டிக் காட்டினார். மேலும், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

-----------------------------------

*மக்கள் நீதிமன்றம்* (10)

உச்சநீதிமன்றத்தின் 75ஆவது ஆண்டு விழாவை ஒட்டி, இன்று முதல் ஆகஸ்ட் 3ஆம் தேதி வரை சிறப்பு மக்கள் நீதிமன்றத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தேக்கத்திற்கு தீர்வு காணும் விதமாக இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாக நீதிபதி கே.வி. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். இந்த சிறப்பு நீதிமன்றத்தை நாடி, நிலுவையில் உள்ள தங்களது வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண, பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார். மக்கள் நீதிமன்றங்களை அனுகவும், குறைந்த செலவில் நிலுவையில் உள்ள தங்களது வழக்குகளுக்கு

தீர்வு காணவும் சிறந்த வழிமுறையாக இந்த மக்கள் நீதிமன்றம் அமையும் என்றும், அவர் கூறினார்.

-----------------------------------

குபேர் (7)

புதுச்சேரியில், நகரத் தந்தை ஏதுவார் குபேர் பிறந்த நாள் விழா அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, பாரதி பூங்காவில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. சாய். ஜே. சரவணன் குமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------------------

*புதுச்சேரி-வேளாண் துறை (14)*

புதுச்சேரி அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை,தோட்டக்கலைப் பிரிவின் மூலம், புதுச்சேரி பகுதியில், தோட்டக்கலை பயிர் சாகுபடி பரப்பளவு மற்றும் உறபத்தித் திறன் அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதயையொட்டி புதுச்சேரி பகுதியில்

உள்ள நகர மற்றும் கிராமப்புற மக்களுக்கு தேவையான தரமான காய்கறிகளை, அவர்களின் வீட்டு தோட்டங்களில், அவர்களே சாகுபடி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில், ஊட்டச் சத்து காய்கறி தோட்டம் அமைக்க 200 ரூபாய் மதிப்புள்ள காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு இந்த ஆண்டிற்கான ஆடிப்பருவத்தில் இலவசமாக வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு.ரங்கசாமி, வேளாண் அமைச்சர் திரு. தேனி ஜெயகுமார் முன்னிலையில், பயனாளிகளுக்கு காய்கறி விதைகள்அடங்கிய தொகுப்பை வழங்கி, தொடக்கி வைத்தார். மேலும், இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், துறை இயக்குநர் திரு. வசந்த குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

-----------------------------------

*வானிலை (7)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. மேற்குதொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி, கோவை மாவட்டங்களில் கனமழை பெய்ததை அடுத்து, பிற

மாவட்டங்களிலும், மிதமான மழை பெய்து வருகிறது. இந்நிலையில் இன்று முதல் ஆகஸ்ட் 3ஆம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒருசில இடங்களில், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-----------------------------------

எத்தனால் (12)

எத்தனால் கலந்த பெட்ரோல் விற்பனையால் மத்திய அரசு 24 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அன்னிய செலாவணியை சேமித்துள்ளது என்று மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி, மாநிலங்களவையில் இன்று எழுத்துப் பூர்வமாக பதில் அளித்தார். E-20 எரிபொருளை விற்பனை செய்யும் அதிக எண்ணிக்கையிலான சில்லறை விற்பனை நிலையங்களுக்கு, இந்த ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாதங்களில் எத்தனால் 100, எரிபொருள் விற்பனை துவங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மேலும், நவம்பர் 2022 முதல், அக்டோர் 2023 வரை, பெட்ரோலில் சுமார் 509 கோடி லிட்டர் எத்தனால் கலக்கப்பட்டதால் 24 ஆயிரத்து 300

கோடிக்கும் அதிகமான அந்நிய செலாவணி சேமிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைத்துள்ளதாகவும் இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி தெரிவித்தார்.

-----------------------------------

மேட்டூர் (6)

கர்நாடக மாநில அணைகளில் இருந்து காவிரியில் பெருமளவு தண்ணீர் திறந்து விடப்படுவதால், மேட்டூர் அணையில் இருந்து விடுவிக்கப்படும் தண்ணீரின் அளவு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. நண்பகல் நிலவரப்படி, ஒகேனேக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 90 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாகவும், நாமக்கல் மாவட்ட கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான பயணம் தொடர்பான, பட்ஜெட்டுக்கு பிந்தைய மாநாட்டில் நாளை புதுடெல்லியில் உரையாற்றுகிறார்.

2024-25ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது.

நாட்டிலேயே அதிக புலிகளை கொண்ட மாநிலம் என்ற பெருமையை மத்திய பிரதேசம் பெற்றுள்ளதாக அம்மாநில முதலமைசசர் திரு. மோகன் யாதவ் தெரிவித்தார்.

புதுச்சேரியில், நகரத் தந்தை ஏதுவார் குபேர் பிறந்த நாள் விழா இன்று அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.